"கர்த்த[illegible]காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

சத்திய வேத பாது

# காவலன்


தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G.P.O. AS A NEWSPAPER

89-ம் புத். | யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு ஐப்பசி மீ 10-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 40-ம் இல.

● மாதர்குலப் பெருமை ● மன்றத்திலே உரிமை

# சங்கத்தில் மங்கையர்

## வத்திக்கான் பொதுச்சங்கத்தில் பதினைந்து பெண்மணிகள் அவதானிகள் அவர்களுள் ஏழுபேர் இல்லறத்தோர் மற்றவர்கள் துறவறத்தோர்



வத்திக்கான் சங்க அவதானிகளில் ஒருவராகப் பிராஞ்சு தேசத்தைச்சேர்ந்த திருமதி மாறி லூயி மொனெ என்பவரைப் பரிசுத்த தந்தை நியமித்த செய்தி சென்ற வாரம் வெளியிடப்பட்டது. இதைத்தொடர்ந்து, இந்தவாரம் வெளியான செய்தியின்படி, இன்னும் 14 பெண்மணிகள் சங்க அவதானிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திருமதி மொனெயைவிட, தற்போது நியமிக்கப்பட்டிருப்போரில் 6 பேர் இல்லறத்தவர். இவர்களில் மூவர் இத்தாலியர். மற்றைய மூவரும் முறையே அவுஸ்திரேலியா, ஒல்லாந்து, ஸ்பானிய தேசங்களைச்சேர்ந்தவர்கள்.

துறவறத்தவரான எட்டுப் பேரும் வெவ்வேறு கன்னிகாஸ்திரிச் சபைகளின் தலைவிகள்.

முதலாவதாக நியமனம்பெற்ற திருமதி மொனெக்கு உரோமாபுரி சம்பேதுருவாரின் மகாலயத்தில் அவர்பூசையில் இருக்கும்பொழுது அவரது நியமனச் செய்திஎட்டியது. 62வயதுடைய இவர் இச்செய்தியைக் கேட்டதும் ஆனந்தக்கண்ணீர் வடித்தாராம். கத்தோலிக்க சமூக முன்னேற்ற வேலைகளுக்குத் தம்மை அர்ப்பணித்த இவர் தற்போது 26தேசங்கள்கொண்டஒரு சர்வதேச சமூகசபையின் தலைவியாகப் பணிபுரிந்து வருகிறார்.

## ஞானோபதேச நடுநிலையம்

மேற்றிராசன இல்லம், யாழ்ப்பாணம்.

### ஞானோபதேச கருத்தரங்கு

● இளவாலை
நிகழிடம்: ஹென்றியரசர் கல்லூரி
நாள்: 10-10-64 சனிக்கிழமை
காலம்: காலை 8-45 மணி

* * *

● மடு
நிகழிடம்: மடுத்திருப்பதி.
நாள்: 24-10-64 சனிக்கிழமை.
காலம்: காலை 8-45 மணி.

மதிய போசனத்துக்குத் தங்குபவர்கள் தொகையை அவ்வப்பகுதியினர் நேரகாலத்தோடு மடுத்திருப்பதிப் பரிபாலன சுவாமிகளுக்கு அறிவிக்கவும்.

* * *

● மன்னார்
நிகழிடம்: சென் சேவியர் கல்லூரி.
நாள்: 25-10-64 ஞாயிறுவாரம்.
காலம்: காலை 8-45 மணி.

மதிய போசனத்துக்குத் தங்கும் ஆண்கள் சென் சேவியர்கல்லூரி அதிபருக்கும், பெண்கள் திருக்குடும்ப கன்னியர்மட சிரேஷ்டதாயாருக்கும் காலதாமதமின்றி அறிவிப்பார்களாக.

* * *

### தோழன் அடுத்தஇதழ்
வெளிவந்துவிட்டது
பிரதிக்கு முந்துங்கள்

தோழன் வருடசந்தா ரூபா 4—00
தனிப்பிரதி சதம் 30

(தபாற்செலவு பிரத்தியேகம்)

## உலக மேற்றிராணிமாரின் கூட்டாட்சி பாப்பரசரின் முதன்மையைப் பாதிக்கவில்லை

"வத்திக்கான்சங்க முடிவுகளுள் ஒன்ருக உலக மேற்றிராணிமாரின் கூட்டாட்சி நிறுவப்பட்டிருப்பதால் பரிசுத்த பாப்பரசரின் முதன்மை குன்றப்போகின்றது என எவரும கருதிக்கொள்ளப்படாது. இதை நாம் திரும்பவும் திரும்பவும்வற்புறுத்தவேண்டும். இம்முடிவினுல் உலக மேற்றிராணிமார் அனைவரும் அப்போஸ்தலர்களின் சபையின் வாரிசுகளாகக் கருதப்படுகின்றனரெனினும், பரிசுத்த பாப்பரசரின் தலைமை அவர்களது கூட்டாட்சிக்கு இன்றியமையாததாய் இருக்கின்றது. பாப்பரசரது தலைமையில்லாமல் மேற்றிராணிமாரது கூட்டாட்சி நிறுவமுடியாது" என்று அதிமேற்றிராணியார் பறென்ரோ அவர்கள் ஆணித்தரமாக விளக்கியிருக்கின்றனர்



## லூதர் தேவதாயாரை மதித்தார்

வத்திக்கான் சங்கத்தில் சென்ற வாரத்தில் தேவதாயாருக்குச் செலுத்தப்படவேண்டிய பக்திஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இவ் விஷயம் மிகநுணுக்கமாகப் பரிசீலனை செய்யப்பட்டது. இதுபற்றிப் போலாந்துதேச மேற்றிராணிமாரின் சார்பாகப் பேசிய அதிமேற்றிராணியார் கௌலீனு அவர்கள் புரொட்டஸ்தாந்துசபையை ஆக்கியவராகிய மாட்டீன் லூதருக்குத் தேவதாயாரின்மேல் இருந்தமதிப்பை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டினுர். தேவனுகிய யேசுநாதருக்குச் செலுத்தப்படவேண்டிய வணக்கத்தைத் தேவதாயாருக்கே செலுத்திவிடாது அவர்மூலம் தேவனை மன்ருடுவதே முறையான கோட்பாடாகுமென்றும் அவர் வற்புறுத்தினுர். லூதரன் சபையைச்சேர்ந்த பிரபல்ய தலைவர்ஒருவர்: "தேவதாயார்கத்தோலிக்கருக்கும், எங்களுக்கும் கிறீஸ்துநாதரை எவ்வாறு பின்பற்றவேண்டும் என்று கற்பித்தருளுவார்" என்று கூறியிருக்கும் சொற்களை அவர் எடுத்துக்காட்டினுர்.

## சங்க பிதாக்களின் மரணம்

நாடுதுரத்தப்பட்ட போலாந்து மக்களின் விசேஷ மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டுக் கடமையாற்றிவந்த அதிமேற்றிராணியார் கௌலீனு அவர்கள் இருதய நோயால் திடீர்மரணமடைந்தார். இருவாரங்களுக்குமுன் வத்திக்கான் சங்கத்தில் தேவதாயார் பக்தியைப்பற்றி அரிய ஆலோசனைகளைக் கூறியிருந்தார். மரண தினத்திலும், வேறு கருமத்தைப் பற்றிப் பேசுவதற்குக் குறிக்கப்பட்டிருந்தார்.

அவர் மரணமடைந்த அதே தினத்தில் வேதப்பரம்புதல்சபையின் பொதுக்காரியதரிசியாகிய அதிமேற்றிராணியார் செகிறில் என்பவரும் காலமானுர். இருவரது பிரேத அடக்கமும் ஒரே நாளில் விமரிசையாக ரோமாபுரியில் நடந்தது.

## சற்பிரசாத மகாநாட்டுக்கு இலங்கை யாத்திரிகர் 1650பேர்

பம்பாய் சற்பிரசாத மகாநாட்டுக்குச் சுமார் 1650 இலங்கை யாத்திரிகர்கள்போக இருக்கின்றனர். சகல ஒழுங்குகளும் ஆகிவிட்டன. இவர்கள் கூட்டம் கூட்டமாக அனுபவம்மிக்க சிலரின் தலைமையிற் செல்லவிருக்கின்றனர். விசேஷ புகையிரத மார்க்கமாகவும், புகைக்கப்பல் மார்க்கமாகவும், ஆகாயமார்க்கமாகவும் பிரயாணஞ்செய்வர். முதற் கோஷ்டியினர் கார்த்திகை 21-ம் திகதி புறப்பட்டு, பம்பாய் நகரைவிட, மைசூர், பங்களூர், பூனு, கோவை ஆகிய இடங்களுக்கும் சென்று சமய, சரித்திர பிரசித்தமான ஸ்தலங்களைத் தரிசித்து மீளவும் மார்கழி 18-ம் திகதி இலங்கைவந்துசேர்வர். ஆயிரம் பேர் அடங்கிய கோஷ்டியினர் விசேஷ கப்பல்மார்க்கமாக மார்கழி 1-ம் திகதி புறப்பட்டு யாத்திரை நாட்களில் கப்பலையே தமது தங்குமிடமாகக்கொண்டு, கோவைநகரமும் சென்று மார்கழி 11-ம் திகதி இலங்கைசேர்வர். ஹரிண் குறெஸ்பிலட் வர்த்தக ஸ்தாபனத்தார் 300 பேர் ஒரு கோஷ்டியாக அங்குசெல்ல இருக்கின்றனர். வேறுபல தனிநபரும் ஆகவேண்டிய பல ஒழுங்குகளும் செய்து முடித்துவிட்டனர்.

ஐப்பசி 18-ம் நாள்



வேதபோதக ஞாயிறு

## மேற்றிராணிமாரின் மேற்சபை

திருச்சபையை ஆட்சிசெய்யப் பாப்பரசருக்கு உதவியாக சர்வதேச மேற்றிராணிமாரின் பிரதிநிதிக்குழுவொன்று "செனெற்" சபையாக நியமிக்கப்படலாம்என்னும் வதந்தி உலாவுகின்றது. ஆகாயப்பிரயாணவசதிகள் சுலபமாக இருக்கும் இந்நாட்களில், திருச்சபையின் கூட்டாட்சி முடிவைநடைமுறையில்கொண்டு வருவதற்கு இது அவசியமாகும் எனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஐப்பசி மாதம்—1964.

| | | | |
|---|---|---|---|
| 11 | ஞா. | பெந்தக்கோஸ்துவுக்குப் பின்வரும் 21-ம் ஞாயிறு | [ப] |
| 12 | தி. | காலதினம் | [ப] |
| 13 | செ. | அர்ச். எட்வேட் | [வெ] |
| 14 | பு. | அர்ச். கல்லிஸ்தார் | [சி] |
| 15 | வி. | அர்ச். அவிலா தெரேசம்மாள் | [வெ] |
| 16 | வெ. | அர்ச். எட்வீக்கம்மாள் | [வெ] |
| 17 | ச. | அர்ச். மார். மரி. அலக்கொ. | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10-ந் திகதி


## வாழ்! வாழச் செய்!

நினைவூட்டுகிறோம்; இது எமது கடமை. செயல் ஆற்றுவது அது உமது உரிமை.

உலகம் இன்னும் கிறீஸ்துவை நன்றாக அறிந்து கொள்ளவில்லை—அவரது ஒளியை நிறைவாகப் பெற்றுக்கொள்ளவில்லை—அவர் உலகில் உதித்தது, ஒரு சிலரை மாத்திரம் இரட்சிக்கவல்ல; முழு உலகமுமே அவரது குடியிருப்பாக மாறவேண்டும். கிறீஸ்து இல்லாத உலகம் உருக்குலைந்த உலகம்; ஒளியற்ற உலகம். கிறீஸ்துவை முழு உலகிற்கும் அறிய வைப்பது, அன்பின் அரசரை அளிப்பது, திருச்சபையின் கடமை—தாய்த் திருச்சபையின் மக்கள் ஒவ்வொருவரினதும் கடமை. இந்த உண்மைகளை எமக்கு உணர வைக்கின்றது "விசுவாசப் பரப்புதல்சபை."

வேத போதக அலுவல் உலகின் எட்டுத்திக்கிலும் உரம்பெற்றுக் கொண்டே போகிறது. அதற்கு, ஆன்ம உதவியும் தேவை: உலக வசதிகளும் தேவை. இந்தப் பொறுத்த பணிக்குக் கைகொடுத்து உதவுகின்றது "விசுவாசப் பரப்புதல்சபை". தர்மநிதியைத் திரட்டுகிறது; அதைப் பகிர்ந்து கொடுக்கின்றது. இந்தச் சபை ஒன்றுதான் இத்தன்மை உள்ள சபைகளுள் பரிசுத்த தந்தையின் சொந்தச்சபை. இது ஒவ்வொரு கத்தோலிக்கனையும் உலகுடன் பிணைத்து வைக்கின்றது. மனம் உருகும் மன்றாட்டால்; எளிய சிறு ஒறுத்தல்களால்; தவத்தின் தியாகத்தினால்; தாராளத் தருமத்தினால்.

விசாரணைப் பங்கிற்கு எல்லை உண்டு; நாட்டிற்கு அளவு உண்டு; இனத்திற்கு வரையறை உண்டு—பரிசுத்த தந்தைக்கோ, எந்த வரம்பும் குறுக்கே வரமுடியாது. அவர் உலகின் தந்தை—எல்லோருக்கும், எவ்விடத்திலும் உதவி அளிக்க வேண்டிய தந்தை. ஆகவே நேரடியாக வேதபோதக அலுவலில் எல்லோருக்கும் உதவி செய்யும் பொருட்டு இந்தச்சபை பிறந்தது.

கிறீஸ்துவின் ஞான உடலில், ஒவ்வொரு (விசாரணைப்)பங்கும் ஒரு சிறிய **உயிரணி**. உடலின் உரம் எல்லா உயிரணிகளின் நலத்திலும் தங்கி இருக்கின்றது. ஒரு சில உயிரணிகளின் நலத்தில் மட்டும் அல்ல. ஞான உடலைப் பொறுத்த மட்டிலும், சில பங்குகள் நல்லாக வாழ்ந்து செழித்து இருப்பதும், வேறு பல வாழ்வின்றி வதங்கிப் போவதும் வளர்ச்சிக்கு அடையாளம் அல்ல — அதைக் கிறீஸ்துநாதர் விரும்பவும் இல்லை.

தின்மை செய்வதும் தவறு! நன்மை செய்யாமல் விடுவதும் தவறு! நல்ல சமாரியன் உவமையில், வழியிலே பிணமாகக் கிடந்தவனுக்கு உதவிசெய்ய முன்வராதவர்களையே கிறீஸ்துநாதர் கண்டித்தார். கடைசி நாளிலும் அவ்வாறுதான். "நான் பசியாய் இருந்தேன்; நீங்கள் உணவு அளிக்கவில்லை. தாகமாயிருந்தேன்; தண்ணீர் கொடுக்கவில்லை; ஆடையற்று இருந்தேன்; உடைதந்துதவவில்லை; வருத்தமாய்க்கிடந்தேன்; சிறையில் அடைபட்டிருந்தேன்—சந்திக்கவில்லை........"

இப் பொன் மொழிகளில் ஆழ்ந்த அர்த்தம் உண்டு. சிந்திப்போம். பொறுப்பை உணர்வோம். கிறீஸ்துநாதர் மட்டில் எமக்குக் கடமை உண்டு; திருச்சபை மட்டில் கடமை இருக்கின்றது; வேண்டாமென்று ஒதுக்கப்பட்ட மக்கள்மேல் கடமை செலுத்த வேண்டும். வேதபோதக ஞாயிறு, இதோ வந்துவிட்டது. (18-10-64.) அது வேதபோதக அலுவல்களின் தர்மநிதி திரட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட நாள்.

இறைக்கும் கிணறு சுரக்கும்! கொடுக்கும் உள்ளம் மலரும்.

**" நீங்கள் உலகமெங்கும்போய் எல்லாச் சிருட்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் "**

—மாற்கு 16-15.



## இஸ்பிரீத்துசாந்து திருநாளின்பின் 21-ம் ஞாயிறு

*" பரலோக இராச்சியமானது தன் ஊழியரிடத்தில் கணக்குக் கேட்கவேண்டுமென்றிருந்த ஓர் அரசனுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது." (சுவிசேஷம்)*

கடவுள்தான் இந்த அரசன். அவர் காலத்தைக் கடந்தவர்; எல்லாம் வல்லவர்; யாவர்க்கும் மேலானவர்; நித்திய நடுவர். வழிபாட்டுவருடத்தின் முடிவுநெருங்குகிறது; அது எமது வாழ்வின் இறுதிக்கு ஒரு முற்குறியாயிருக்கிறது; அரசன் கணக்கைமுடிக்க விரும்புகிறான்; இந்தக் கணக்கு முடிக்கும் நாளிலிருந்து தப்பித்துக்கொள்ளமுடியாது.

இன்றைய பூசையில் திருச்சபை இருவித மனிதரை எம்மனக்கண் முன் நிறுத்துகின்றது. அவர்கள் கணக்கு முடிப்பதற்கு எப்படி ஆயத்தப்படுத்தினர் எனக்காண்கிறோம். இவர்களில் ஒருவன் நாம் இன்று சுவிசேஷத்தில் வாசிக்கும் கெட்ட ஊழியன். அவனுக்கு ஒரு பெருங்கடனை அரசன் மன்னித்தான். அவனோ தனது உடன் ஊழியன் ஒருவனின் சிறுகடனை மன்னிக்க மறுத்தான். ஏனெனில், உலகசெல்வங்களிடம் அவன் தன் மனதைப் பறிகொடுத்திருந்தான். உண்மையிலே அவன் ஒரு சுயநலப்பித்தன்; கல்நெஞ்சக்கயவன்.

இன்றைய பூசையில் நாம்காணும் மற்றமனிதன் யோபு. "ஊஸ் எனும் தேசத்திலே யோபு எனும் பெயர் கொண்ட ஒருவர் இருந்தார். அவர் கபடமற்றவர்; நேர்மையானவர்; சருவேசுரனுக்குப் பயப்படுகிறவர்." (காணிக்கை வாக்கியம்) யோபுவை நெறிதவறச்செய்வதற்குக் கங்கணங்கட்டி நின்றதுசாத்தான். அதற்காக அது புரிந்த அட்டூழியங்களுக்கோ அளவில்லை, "அவன் (பிசாசு) அவருடைய சகலபொருட்களையும், பிள்ளைகளையும் சங்கரித்து, அவருடைய சரீரத்தையும் கொடிய புண்ணால் வாதித்தான்."

ஆனால், யோபு அறநெறிதவறவில்லை. அவர் எளிமையைக் கடைப்பிடித்தார்; நேர்மையாய் நடந்தார்; யாவற்றிலும் கடவுளுக்குப் பணிந்தார்: அவருக்கு இறைவனே சகலமும். "இறைவன் கொடுத்தார்; இறைவன் எடுத்துக்கொண்டார்" என எத்தகைய இக்கட்டு இடைஞ்சலிலும் மனச்சாந்தியுடன் கூற வல்லவராய் இருந்தார்.

அரசன் தனது ஊழியர்கள் சகலரோடும் கணக்குமுடிக்க விரும்புகிறார். நாம் இதிலிருந்து தப்பமுடியாது. ஆனால், நாம் நித்திய நடுவர் முன் கெட்ட ஊழியனைப்போல் நிற்போமா? அல்லது புனித யோபுவைப்போல் நிற்போமா? என்று நிச்சயிக்கும் வாய்ப்பு நமக்குண்டு. எனவே, இவ்வாரம் இந்த முக்கிய விஷயத்தை நிச்சயித்துக்கொள்ள முயற்சிப்போம்.

இ. மரியவளன்.

## மிஷன்ஞாயிறு 18-10-64

### கத்தோலிக்கரின் கடமை வேதப்பரப்புதல்

### மிஷன்ஞாயிறு ஏன்?

உலகின் பலபாகங்களிலும் வேதத்தைப்பரப்பத் தேவைப்படும் உதவிகளை ஒன்றுதிரட்டக் குறிக்கப்பட்ட தினம் மிஷன் ஞாயிறு. வேதத்தைப் பரப்பத் தேவைப்படும்உதவிகள் செப,தப,தானங்கள். இவை ஒவ்வொன்றும் முக்கியமானவை. செபத்தாலும், தபத்தாலும் செய்யக்கூடியவற்றைத் தானத்தினால் செய்துவிடமுடியாது. வேதத்தைப் பரப்புதற்குச் செபமும், தபமும் இன்றியமையாதன. அதுபோலவே தானமும் இன்றியமையாதது. இவை யாவும வேதப்பரப்புதல் சபையினரால் ஒன்றுசேர்க்கப்பட்டு, பாப்பாசரின் வசம் ஒப்படைக்கப்படுகின்றன. இவற்றைப் பரிசுத்ததந்தை தேவைக்குத் தகுந்தவிதத்தில் உலகின் பலபாகங்களுக்கும் பகிர்ந்துகொடுத்து உபயோகித்துக்கொள்ள வேதப்பரப்புதல் சபையினருக்குக் கட்டளையிடுகின்றார். இச்சபையின் வேலைகளில் பாப்பாசர் விசேஷஅன்பும், கவனமும் உடையவர். இவ்வருடம் மிஷன்ஞாயிறு தினம், **19-10-64.**

### நல்மக்களின் தொண்டு


மிஷன் ஞாயிறு என்றவுடன் ஓர் உணர்ச்சி கத்தோலிக்க நல்மக்களுக்கு ஏற்படுகின்றது. அவ்வுணர்ச்சியானது அவர்களதுகாதில்விழும் ஓர் அபயக்குரலினால் ஏற்படுகின்றது. அக்குரல் யேசுநாதரின் போதனையை அறியாதாரின் அபயக்குரல். "எமக்கு உதவுங்கள்" என அது தொனிக்கின்றது. திருச்சபையாகியவீட்டின் தலைவரான பாப்பாசரின்காதில் அதுவிழுந்ததும் அவர் தமது நல்மக்களைப்பார்த்து, "இவர்களுக்கு உதவமாட்டீர்களா?" என்று கேட்கின்றார். தந்தையின் விண்ணப்பத்தை நல்மக்கள் அசட்டைசெய்வார்களா? தம்மாலான உதவியாவற்றையும் செய்ய முன்வருவரென்பது திண்ணம்.

### தேவனை அறியாதவர்பலர்

உலகில் பலகோடிமக்கள் தேவனையும், அவர் போதனைகளையும் அறியாமல இருக்கின்றார்கள். சிலர் அறிந்தும் அதை அசட்டைசெய்துவருகின்றனர். இவர்களைத் தேவனிடம் இட்டுச்செல்லப் பல்லாயிரம் தொண்டர்கள் தேவைப்படுகின்றனர். பெருந்தொகைப் பணச்செலவு ஏற்படுகின்றது. குருமார் ஆயிரக்கணக்காகப் பயிற்றப்படவேண்டும். பலவேறு இடங்களுக்கு அவர்களை அனுப்பி, தாபரித்து, கோவில்கள், பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், சுதேசகுருமடங்கள், தர்மஸ்தாபனங்கள் முதலியனநிறுவி உலகமக்களுக்குத் தேவனை அறிவிக்க வேண்டும். இதுஒரு பிரமாண்டமான வேலை. ஆகவே பிறர்சிநேகமுள்ள கத்தோலிக்க நல்மக்கள்யாவரும் இதன் அவசியத்தை உணர்ந்துகொள்ளாவிடில் இவ்வேலை உயிரற்றுநின்றுவிடும்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்!**

தேவமாதா தமது பிரமாணிக்கமுள்ள தொண்டர்களை விசேஷ கவலையுடன் பாதுகாத்து, ஆபத்துவேளைகளில் எல்லாம் அவர்கள்மேல் பெரிதும் விழிப்பாயிருக்கிறார். "தேவமாதாவின் பிரமாணிக்கமுள்ள ஊழியன் ஒருபோதும் கெட்டழிந்துபோக மாட்டான் என்று அர்ச். அஞ்செல்மு சொல்லியிருக்கிறார். "மரியாயைப் பின்பற்றுவதால் நீ ஒருபோதும் வழி தப்பிப்போக மாட்டாய்; அவரை மன்றாடினால் அவநம்பிக்கைக்குள்ளாகமாட்டாய்; அவரைப்பற்றி நினை நீ கெட்டழிந்து போகமாட்டாய்; அவர் உனக்குத் தாபரமாயிருந்தால் நீ பாவத்தில் விழமாட்டாய்; அவர் உன்னைப் பாதுகாக்க நீ ஒன்றுக்கும் அஞ்சமாட்டாய்; அவர் உன்னைக் காவல் செய்ய நீ கேட்டுக்குள்ளாகமாட்டாய்"என்று அர்ச். பேர்ணாட் எழுதிவைத்தார். பரிசுத்த கன்னிகை இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் உன்னைப் பேணிப் பாதுகாக்கும்படி அவரை அடிக்கடி மன்றாடிவா. திருச்செபமாலைப்பக்தி தேவ தாயாருக்கு மிகவும் விருப்பமான பக்தி. இப்பக்தியைப் பக்திபற்றுதலோடு அனுசரித்துவா. ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் அவவைக் குறித்து மூன்று பிரியதத்த மந்திரம் ஓதிக்கொண்டுவா. அத்துடன் "சென்மபாவமில்லாமல் உற்பவித்த மரியாயே, உமது ஒத்தாசையைத் தேடி உம்மிடம் வருபவர்களுக்காக வேண்டிக் கொள்ளும்"என்ற சிறு செபத்தையுஞ் சேர்த்துக்கொள்.

—அண்ணா.

# செபமாலை

பூ மாலை வாடிவிடும்
புகழ் மாலை வாடிவிடும்
வாடாத மாலையுண்டு
அது செபமாலையன்றோ.

●

பூலோக மாந்த ரெல்லாம்
புவி விட்டுப் போகையிலே
மேல் லோகம் இட்டுச்செல்லும்
மேலான மாலை யன்றோ.

●

கண்களில் நீர் வரவே
கவலை நெஞ்சில் இருந்தாலும்
இமைப் பொழுதில் மறைந்துவிடும்
இதை ஓதும் வேளையிலே

மாலைப் பொழு தாகையிலே
மனை மகள் முயன்றிடுவாள்
சேய்களை அழைத்து நல்ல
செபமாலை ஓதிடவே.

●

ஆடவரும் உடன் சேர்ந்தால்
அதைவிட இன்பமில்லை
கல்லும் கரைந் திடுமாம்
கனிந்து வரும் ஓசையிலே.

●

ஒன்றாய்ச் செபித்திடில் நாம்
ஒன்றாய் வாழ்ந்திடலாம்
நன்றாய் இதை யுணர்ந்து
நாம் இன்பம் பெற்றிடுவோம்.

—அன்பு

# அங்கத்தவர் வரிசையிலே........

B. 542. செல்வன் ஜே. பத்திநாதன், சுன்னாகம்.
„ 543. „ பபியான் சுகுணராஜ், கம்பளை.
„ 544. „ சேவியர் நிர்மலன், பருத்தித்துறை.
„ 545. „ ப. இசிதோர், வ/புதுக்குடியிருப்பு.
„ 546. செல்வி இ. கெத்றீன் ஞோரா, இறக்குவானை.
„ 547. செல்வன் விக்ரர் அன்ரனி திருகோணமலை.
„ 548. „ புனிதராஜன்–எஸ்–பீரிஸ், குருநகர்.
„ 549. „ ம. யோண் வில்பேட் கரம்பொன், கிழக்கு.
„ 550. செல்வி பொ. பூங்கோதை, யாழ்ப்பாணம்.
„ 551 செல்வன் கி. மாட்டீன், நுவரெலியா.
„ 552. செல்வி எஸ். வெற்றிமேரி, தலைமன்னார்.
„ 553. செல்வன் அ. லோறன்ஸ், தலவாக்கொல்லை.
„ 554. „ பி. ஆசிர்வாதம், நாகசேனை.
„ 555. „ அ. எமிலியானுஸ், உருத்திரபுரம்.
„ 556. செல்வி த. மரியரெத்தினம், உருத்திரபுரம்.
„ 557. செல்வன் சூ. இயூஜின், முல்லைத்தீவு.
„ 558. „ என். ஈ. அமலநாதன், மன்னார்.
„ 559. செல்வி றீற்று ரூபின், கொழும்பு–2.
„ 560. „ தே. மேரிதிரேசா, உருத்திரபுரம்.
„ 561. „ தீ. பிலோமினாள், மாம்புரி.
„ 562. „ ஞானமலர் பாவிலுப்பிள்ளை, சில்லாலை.
„ 563. „ மேரிமெற்றலின் பங்கஜம், இளவாலை.
„ 564. „ யே. அந்தோனி இரத்தினம், தலவாக்கொல்லை.
„ 565. „ அ. விக்ரர், நாவற்காடு.
„ 566. „ எல். ஏ. இராசநாயகம், மிருசுவில்.

# பாதுகாவலனை அறியாதாருக்கு அவனை அறிமுகப்படுத்துங்கள்

# மறைந்த தந்தை பீற்றர்ப்பிள்ளை

கற்றோர் சபையின் குளிர்மதியே! கல்விக் கண்ணின் திருமணியே!
பெற்றாள் ஈழ மணிநாட்டாள் பீற்றர்ப் பிள்ளை எனவளர்ந்தாய்;
நற்று மறையின் அன்னம்போல் நமது நாட்டுக் கணிசெய்து
வற்றாக் கல்வி அமுதீந்த வள்ளல் ஓடி மறைந்தாயோ?

பாரில் பரிதி மறையாத பரந்த இடத்தைப் புரந்துவந்த
சீரில் உயர்ந்த பிரித்தனியர் தேடிப் புகழும் கலையரசே!
ஊரின் நடுவிற் பழமரமே! உண்மைத் தொண்டர்க் கொருதலைவா!
யாரை நம்பி இனிவாழ்வோம்? ஐயோ வாழ்க்கை பனித்துளியே!

நீதி உண்மை ஞானம்இவை நெஞ்சம் நிறைந்த நிறைகுடமே!
சாதி சமயப் பீடையினால் தளருந் தாய்க்கு மருந்தெடுத்து
ஓதும் "சமூக நீதி" எனும் உயர்ந்த இதழின் ஆசிரிய!
வேதப் பொழிலே! ஈழத்தாய் வெற்றி விருதே பறந்தாயோ?

கங்கை போலத் தெளிந்தசொற்கள் கனிந்தே எடுத்து எழுதவல்லான்
பொங்கும் அருவி நுரையிலுமே புனிதம் ஆக்கிப் பேசவல்லான்
தங்கக் குணத்தில் நசரேத்தின் சாயல் படிந்த தவக்குரவன்
மங்கும் கல்வி வளர்ப்பதிலே வாழ்வை யளித்தான் மறப்போமோ?

— அமுது —

# ரசத் துளிகள்

தொகுப்பு: மடோனா

ஐப்பசி 3-ந்தேதி சிறிய புஷ்பத்தின் திருநாளைக் கொண்டாடினோம். அந்தப்புனிதை கார்மேல் மடத்திலிருக்கும்போது தம் உறவினர்கட்கெழுதிய லிகிதங்களுள்மூன்று இங்குதரப்படுகின்றது.

கார்மேல் 13–8–1893.

யேசு +

**அன்பின் லியோனி:**

உங்கள் எண்ணங்கள் நிறைவேறி விட்டன. அதையெண்ணி அகமகிழுகின்றேன். ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றேன்.

நோவாவின் பேழையிலிருந்து புறப்பட்ட மாடப்புறாபோன்று இப்பரந்த உலகில் உங்கள் பாதங்களை நிறுத்துவதற்குஇடமின்றிப் பலகாலம் அலைந்தீர்கள்.

அன்பின் யேசு உங்கள் அலைச்சல்களைக் கவனித்தார். இந்த மாடப்புறாவின் பரிதாபக்குரல் அவரது அன்புள்ளத்தைத் தொட்டது. தமது அருட்கரங்களை அகலவிரித்தார்.

இவ்வுலகில் இம்மாடப்புறா உலக கவலைகளின்றி வாழத் தகுந்ததொரு இல்லத்தை வழங்கிவிட்டார். ஆம், இந்த மாடப்புறாவைத் தம் மணமகளாக ஏற்றுக்கொண்டார்.

சோதரி! இவ்வுலகம் எங்கள் சொந்த இல்லம் அல்ல, நாமனைவரும் பிரயாணிகள். எங்கள் தாயகமான பரலோகத்தை நோக்கிப் பிரயாணம் செய்பவர்கள்.

இப்பிரயாணம் நீண்டது. துன்ப துரிதங்கள் நிரம்பியது. சரியான பாதையில் நாம் சென்றால் அது மோட்சவீட்டில் எம்மைச் சேர்க்கும். அங்கு ஒருபோதும் மாறாத பேரின்பம் உண்டு.

ஒரு தந்தையின்கீழ் யாவரும் சோதரர்களாக அங்கு இன்பம் துய்ப்போம். எனவே, எம்பிரயாணம் சரியானபாதையில் அமைதல் வேண்டும். அதற்காக அயராதுழைத்தல் வேண்டும்.

அந்த உழைப்பு எம்மை மோட்ச பாக்கியத்துக்கு இட்டுச் செல்லும். சிறு வயதில் எம்மைப்பிரிந்த அன்னை, எங்கள் சோதரர் நால்வருடன் எமக்காகக் காத்திருக்கிறாள். தன் புதல்விகள் ஐவரும்யேசுவின் மணவாட்டிகள் என்பது அவளுக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தரும்.

அன்புச்சோதரி, நீண்ட துயரங்களின் பின்னால் ஆறுதல் பெற்றுள்ளீர்கள். அதற்காக அகமகிழுகின்றேன். துன்பதுரிதங்கள் நமதாண்டவர் எமக்கருளும் நற்கொடைகள். அதை மறவாதீர். ஆண்டவரின் சித்தமே எங்கள் பாக்கியம்.

அன்பு முத்தங்கள்
குழந்தை யேசுவின் தெரேஸ்.

கார்மேல் 26–3–1894

யேசு +

**அன்பின் தோழி:**

உங்கள் லிகிதம் பெற்றேன். எனது பாலப்பருவ விளையாட்டுத் தோழியின் திருமணச் செய்திகேட்டு மிக்க மகிழ்ச்சி கொண்டேன். இறைவன் சித்தம் இது. ஒவ்வொரு ஆன்மாவுக்கும் ஒரு நல்ல வருங்காலத்தை அவர் திட்டமிட்டுள்ளார்.

அவரது விருப்பத்திற் கிணங்க ஒழுகுவது எம்கடமை. உங்கள் மனம் அமைதியில் திளைப்பது குறித்தும் மகிழ்கிறேன். ஏனெனில், அமைதியளிப்பவர் இறைவரொருவரே. அவரது அருட்கரம் உங்கள்மேல் நீட்டப்பட்டுளது.

கார்மேல் கழகத்தின் உயர்ந்த மதிற்சுவர்கள் ஆன்மாக்களிடையேயுள்ள அன்பை பிரிப்பதில்லை. எனவே அன்புத் தோழி உங்கள் திருமணத்தன்று என்னால சமுகமளிக்க முடியாவிடினும் எனதான்மா தங்கள் மகிழ்ச்சியில் கலந்துகொள்ளும்.

இல்லறமும் துறவறமும் இறைவன் இவ்வுலகோருக்களித்த இருபெரும் பாதைகள். இப்பாதைகளை நாம் தகுந்தபடி உபயோகிப்பின் அவை நித்திய பேரின்பத்துக்கு எம்மை இட்டுச்செல்லும்.

உங்கள் இல்வாழ்வின் இன்பங்கள் இறைவனுக்குகந்தவையாக அமைய வேண்டுமென மனமார வாழ்த்துகிறேன். தங்கள் ஆன்மாவுடன் இரண்டறக் கலக்கும் தங்கள் அன்புக் கணவரின் ஆன்மாவும் இறைவனுக்குகந்த புனிதமுடன் விளங்கவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

இன்பத்திலும் துன்பத்திலும் தங்களிருவரது ஆன்மாக்களும் இணைபிரியாது இறைவழிச் செல்லவேண்டுமென்பதே எனது நீங்காத ஆசை.

அன்பின் முத்தங்கள்
குழந்தை யேசுவின் தெரேஸ்

கார்மேல், 10–1–1889.

யேசு +

**அன்பின் செலீன்:**

எனது அன்பர் யேசு அதோ தமது சிலுவையுடன் நிற்கின்றார். அவரது அன்புள்ளத்தை ஆட்கொண்ட பெருமை உனக்குரியது. தம்மைப் போலவே உன்னையும் ஆக்கவல்லவர் அவர்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலையின் மணிகளில்!........

(செல்வி ரோஜா சாமுவேல்



பவத்திஞல் அழிந்திட்ட மாந்தரெமை
பரலோகம் சேர்ப்பதற்காய் பரமன்
பாரினில் பாலனுய் உதித்திடவே
பண்புடை மங்கையாள் உம்மிடமே
பரிவாகத் தூதொன்றை அனுப்பிவிட
பரிசுத்த கபிரியேல் பரிந்து வந்தே
பாங்குடன் மங்களம் ஓதிடவே
பணிவாக மனமிக மகிழ்ந்தீரே!

மங்களம் தாயே! மங்களமே!




இறைவன் தன் பரிசுத்த சித்தமதில்
இயைந்திடும் முன்னேடி எதிர்நோக்கி
இசபெலின் உதரத்தே இனிய கனி
இணைத்திட இன்பமாம் செய்திகேட்டு
இனித்திடும் பணிசெய்து உதவுதற்
காயவள்
இல்லத்தை நாடியே சென்றபோது
இணையில்லா அன்பு பெருகிடவே
இன்பமாய் மனமிக மகிழ்ந்தீரே!

மங்களம் தாயே! மங்களமே!



பெத்லகேம் நகரியின் குகையினிலே
பேரிராச் சூழ்ந்திட்ட வேளையிலே
பொற்புறு தேவனைப் பாலகனுய்
பெற்றெடுத் தன்புடன் அணைத்தபோது
பரமனின் சேனை சூழ்ந்துநின்றே
பரிசுத்த கீதங்கள் பாடிடவே
பரலோக இன்பத்தில் அழுந்தியுமே
பாங்குடன் மனமிக மகிழ்ந்தீரே!

மங்களம் தாயே! மங்களமே!



நாற்பது நாட்கள் முடிந்ததுமே
நாதன் யேசுவைக் கரத்தேந்தி
நல்லவர் தாதை சூசையுடன்
நலமுடன் ஆலயந் தனைநண்ணி
நற்பரன் கையில் பாவிகட்காய்
நல்மீட்பர் தன்னையே ஒப்புவித்து
நல்லாஞள் சிமியோன் வார்த்தைகேட்ட
நாளதில் மனமிக மகிழ்ந்தீரே!

மங்களம் தாயே! மங்களமே!



பாஸ்காப் பண்டிகை முடிந்திடவே
பரிவாக வீடு திரும்புகையில்
பாலகன் யேசுவைக் காணுதே
பரிதவித் தழுதே பதறியுமே
பாசக்கண்ணீர் பெருக்கெடுக்க
பட்சமாய் அலைந்து பல்கலைவேத
பாரகர் மத்தியில் கண்டதுமே
பண்புடன் மனமிக மகிழ்ந்தீரே!

மங்களம் தாயே! மங்களமே!

(தொடரும்)

(பி. கு.)
மரியன்னையின் செபமாலை மாதமிது. அன்னுளின் பரிசுத்த காரணிக்கங்களைத் தியானிக்குமுகமாக மேலே களிகூர்ந்த காரணிக்கங்கள் ஐந்தும் கவிதைருபத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்த வாரங்களில் வியாகுல, மோட்சானந்த காரணிக்கங்களைத் தியானிப்போம்.

# மடியிருத்தி முகந்திருத்தி

( ஏ. பி. வி. கோமஸ் )

பேரொருத்தி என்னருகில் பெற்ருேளாய் நீயிருக்க
வேருெருத்தி வேண்டுமோ வழித்துணையாய் என்வாழ்வில்,
காரிருத்தி கழனிபெயும் கருணைமழை தானதுபோல்,
பாரிருத்தி பரிதவிக்கும் பாவியனை பாலிப்பாயே!

●

மடியிருத்தி முகந்திருத்தி மகிழ்ந்தன்புப் பாலூட்ட,
படியிருத்தி பாடந்தான் பக்குவமாய் சொ(ல்)லிக்காட்ட,
அடியிருத்தி அன்புமகன் அடிமையாய் ஆகிவிட்டேன்,
இடிதிருத்தி நல்கவேண்டும் இன்பவாழ்வை இறையின் தாயே!

●

காலெடுத்து உதைத்தாலும் கழறேன்நான், உன்னருமை
தாளெடுத்து வைத்துவிட்டேன் என்தலையே, நீயென்தாயே!
பாழெடுத்த உடல்சுமந்து பரிதவிக்கும் என்னைநீயே
ஆள்எடுத்து உன்மகனுய், அன்புருவின் அருமைத்தாயே!!

# பேசும் பேனு

### கல்லூரியை நோக்கி

கடந்தவாரம் 29-ந் தேதி பிற்பகல் இரண்டரை மணி. கொழும்பு அர்ச். சூசையப்பர் கல்லூரி வாயிலில் நண்பர்களையும் என்னையும் டாக்சி வண்டி இறக்குகிறது. கல்லூரியைநோக்கிமுன்னேறும் சனவெள்ளத்துள் நாமும் கலந்துகொள்கிறேம். கல்லூரிச் சிற்ருலயத்தின் முன்னுல் பொலிஸ்காரர்கள் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துகிருர்கள். அவர்களிண்பிடியில் தப்பி சிற்ருலயத்துள் நுழைகிறேம்.

### சிற்ருலயத்தில்

சாதாரணமாகக் கல்லூரிகளில் அல்லது சந்நியாச நிலையங்களில் இருக்கும் ஆலயங்களைச் சிற்ருலயம் அல்லது செபக்கூடம் என்று கூறுவார்கள். ஆயின், சஞ்சூசையப்பர் கல்லூரியில் உள்ளதைப் பெரிய தேவாலயம் என்றே கூறவேண்டும். கம்பீரம் மிக்க அச்சிற்ருலயம் அன்று களையிழந்து காணப்பட்டது. சோகத்தின் அடையாளமான கருப்பு நிறப் படுதாக்கள் சுவர்களில் பரிதாபத்துடன் தொங்கிக் கொண்டிருந்தன.

### இறுதிமரியாதை

சிற்ருலயம் நிரம்பிவழிகிறது. சிறுவர்கள், சிறுமிகள், இளைஞர்கள், யுவதிகள், கனவான்கள், சீமாட்டிகள், குருக்கள், கன்னியர்கள் என்ற பேதமின்றி ஆலயத்தின் முகப்பிலிருந்து பீடம்வரை இருவரிசைகளில் காத்து நிற்கிருர்கள். நாங்களும் அந்தக் கியூ வரிசையில் சேர்ந்து கொள்கிறேம். வரிசை மெல்லமெல்ல முன்னேறுகிறது. கால்கடுக்க காத்துநின்றபின் பீடத்தண்டை செல்கின்றேம்.

### கலாமேதையின் திருவுருவம்

வெள்ளைநிற ஆடையணிந்து கருப்பு நிறக்கழுத்துப்பட்டியுடன் ஆறு இளைஞர்கள் பிரேதப்பேழையைக் காவல் செய்துநிற்கின்றனர். மலர்வளையங்களின் மத்தியில் கலாமேதை, ஈழத்துக் கத்தோலிக்கரின் அரசியல்வழிகாட்டி, சமூகநீதியின் தந்தை, சஞ்சூசையப்பர் கழக முன்னுள் அதிபர், அக்குவைனஸ் கலைக்கழக நிர்மாணி, பத்து மொழி வல்லுநர் பீற்றர்ப்பிள்ளை அடிகளின் திருவுருவம் அமைதியாக சயனிக்கின்றது. அமைதியும் புன்முறுவலும் அவர் வதனத்தில் தாண்டவமாடுகின்றன. கண்களில் நீர்வழிய, சிரம் சாய்த்து இறுதிவணக்கம் தெரிவிக்கிறேம். அந்தப் பொற்சிலையைப் பார்த்தவண்ணம் செய்வதறியாது நிற்கின்றேம். காவல் இளைஞர் எம்மிடம் வந்து தயவுசெய்து அப்பால் செல்லுங்கள் எனப்பரிவோடு கூறுகிருர். பிரிய மாட்டாமலே பிரிகின்றேம்.

### கல்லூரி மைதானத்திலே

பார்க்குமிடமெல்லாம் சனத்திரள். ஆலயத்துள் இடமில்லையென வெளியில் வருகிறேம். அந்தப் பரந்தமைதானமும் நிரம்பிக்கொண்டிருக்கிறது. சாரிசாரியாக மோட்டார்கள், டாக்சிகள், பஸ்வண்டிகள், வான்கள் என்பன வந்து தரிக்கின்றன. பாடசாலை மாணவர்கள், கன்னியர்கள் மலர்வலையங்களுடன் வரும் கனவான்கள், சீமாட்டிகள் ஆகியோரை இறக்கிவிட்டு பொலிசார் காட்டிய பாதையில் செல்கின்றன. களையிழந்து நிற்கிறது கல்லூரிக் கட்டிடம். அரைக்கம்பத்தில் சோர்ந்து காணப்படுகிறது கழகதுவசம்.


### மணி மூன்று

கொழும்பு அதிமேற்றிராசன துணை ஆயர் சேரம் ஆண்டகை பிரதான பீடத்துக்கு வருகிருர். சுமார் 200 குருக்கள் துணைபுரியக் கத்தோலிக்க திருச்சபையின் இறுதிச்சடங்களை

[ தொடர்ச்சி 5-ம் பக்கம் ]


அல்ஸ்ட்ரன்

மீன்பிடி வலைகள்




அல்ஸ்ட்ரன் மட்டுமே இவ்வனுகூலங்கள் அனைத்தையும் அளிக்கவல்லது.

CIC அல்ஸ்ட்ரனின் விசேஷத் தன்மைகளை மற்ற நார்களுடன் ஒத்திட்டுக் காட்டும் இலவசப் புத்தகம் ஒன்றை பெற இன்றே எமக்கு எழுதுக.

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்,
தபால் பெட்டி 352, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்து விளக்கு

# "சித்திரம் பேசுதடி"

நீ. மரியசேவியர்

## சிலையாக நின்றேன்!

## சிந்திக்க மறந்தேன் சிறகடித்துப் பறந்தேன்.

மீனைக் கண்டேன். கடலிலே அல்ல; கண்ணுக்குள்ளே .ரோஜா மலரைக் கண்டேன். காட்டிலே அல்ல; கன்னத்திலே. ஆடுகின்ற பூங்கொடியைக் கண்டேன். நூல்போன்ற இடையிலே. வானவில்லைக் கண்டேன். வடிவான புருவத்திலே. சிரிப்புக்குள் முத்துக் குவியல்; கூந்தலிலே கருமேகம்; முகத்திலே வெண்ணிலா!!! இது கற்பனை அல்ல; காகிதத் தாளிலே கண்கண்ட காட்சி. அது ஒரு சித்திரம்; உண்மைதான். ஆனால், பேசும் சித்திரம்; நிலைமயங்கி மயங்கிச் சிந்திக்க மறந்த என்னைச் சிந்திக்கத் தூண்டியது சித்திரம்.

அது ஒரு பெண்ணின் உருவம். பெண்களுக்குள் பெண்ணாகிய கன்னித் தாயின்—தேவதாயின் உருவமாம்—சரி. யாரோ ஒருவன் வரைந்து விட்டுச் சென்றிருக்கிறான். அவன் கையில் இருந்த பேனா, அங்கும் இங்குமாகக் கோடுகளை வரைந்து, மையைத் தெளித்து, சித்திரத்தை எழில்படைத்த பெண்ணின் உருவமாக மாற்றியது. சித்திரத்தைச் சித்திரமாக்கியது, குப்பி மையுமல்ல; குறுக்கும், மறுக்கும், சரிந்தும் வளைந்தும், நெளிந்தும் செல்லும் கோடுகளும் அல்ல—ஆனால், பேனா கொட்டிய மையின் ஒழுங்கு; கோடுகளின் ஒழுங்கு; அமைப்பு—ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பு. ஒழுங்கு இல்லை என்றால் சித்திரமுமில்லை—சிங்காரமுமில்லை.

வந்தது சித்திரம்! நிலவு, மாலையிலே வருகின்றது. உடலுக்கும், உள்ளத்திற்கும் குளிர்ச்சியைக் கொடுக்கின்றது. மேகம் காலம்பார்த்து மழையைப் பொழிகிறது—வானத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அல்லது உலகிலே பசும்புல்லை முதலாகக் காண முடியாது. உழவர் ஏர்கொண்டு உழமாட்டார்; பசிநிலைத்து உயிர்களை வருத்தும். இங்கு, மேகத்தின் ஒழுங்கு மாத்திரமல்ல, வானத்திற்கும் பூமிக்கும் உள்ள தொடர்பும் தெரிகின்றது.

சித்திரத்தில் ஒவ்வொரு உறுப்பிலும் ஒழுங்கு இருக்கின்றது. உறுப்புக்கள் எல்லாம்சேர்ந்து ஒழுங்கில் இணைக்கப் பட்டிருக்கின்றன. சித்திரத்தில் அமைந்த முழுஉடலுக்கும், ஒவ்வொரு உறுப்புக்கும் தொடர்புஇணைப்பு இருக்கிறது. அல்லது சித்திரம் அழகாய் இருக்காது. சித்திரமாகவே இருக்காது. மீன், மலர், நிலா, மேகம் இவைகளைப் பொறுத்தமட்டிலும் ஒன்றுக்கொன்று ஒழுங்குடன் தொடர்புபட்டு இருக்கின்றன.

மீன்உண்பது கடலில் காணப்படும் பொருட்களை. மக்கள் மீனைப்பிடிக்கின்றார்கள்; பிழைக்கின்றார்கள்; உண்கின்றார்கள்; வாழ்கின்றார்கள். மலர் மணம் கொடுத்து மக்களை மகிழச்செய்கிறது. கனிகொடுக்கின்றன. வண்டுகள் தேன் பறிக்கின்றன! புதியசெடிகள் உருவாகின்றன. அழகுநிலா அசைந்துசெல்கிறது. உலகைச்சுற்றி வட்டமிடுகின்றது. வானவெளியில் பறந்துகொண்டிருக்கும் பூமியோ, நிலாவோ, சூரியனோ மோதுவதுமில்லை. கிட்டவந்து முட்டிக் கொள்வதுமில்லை. மாறாக ஒழுங்கின்முறைப்படி, நாளையே இரண்டாகப்பிரித்து, சூரியனும், சந்திரனும் அரசாட்சி செய்கின்றன. உயிர்கள் வாழ்வதற்கு வெவ்வேறு காலங்கள் தேவை. சூடும்தேவை; குளிரும் தேவை; ஒளியும்தேவை; இரவும் தேவை; வேலையும்தேவை; ஒய்வும் தேவை. வானத்தின் காற்றும்வேண்டும். பூமியின் தெளிவான தண்ணீரும் வேண்டும். மக்கள் தம்முடைய மனத்திட்பத்தை, உடல்வலிமையைப் பெருக்குவதற்கு உலகிலுள்ள பொருட்கள் எல்லாம் ஒழுங்குடன் தம்முடைய இனத்தைப் பொறுத்தமட்டிலும் உலகின் முழுவாழ்வைப் பொறுத்தமட்டிலும் இயங்க உதவுகின்றன.


பாதுகாவலன் சந்தாவை

ஒழுங்காகச் செலுத்துவது

சிறந்த கத்தோலிக்கு சேவை



உமது சந்தா?


கண்களை வரைந்தபோது மீன்களின் கவர்ச்சியைக் கொடுத்தமைத்தான் ஓவியன்! நீரில் வாழும் மீனும் உண்மையில் ஓர் உயிருள்ள சித்திரம் தான். அதன் உடல் அமைப்பிலும், வாழ்வின் அமைப்பிலும் ஒழுங்கு இருக்கின்றது. தண்ணீரில் வாழ்கின்றதுமீன்; தண்ணீருக்குள் மூச்சு விடுகின்றது—நீந்தி விளையாடுகின்றது—தண்ணீர் உணவை உண்கின்றது.

கன்னத்தை ரோஜா மலராக்கிய ஓவியன், மலர்களின் தன்மையை உணர்ந்திருப்பானோ, என்னவோ! மலர்கள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்—காலையிலே கமலம் விரிகின்றது—மாலையிலே மல்லிகைப்பூ மலருகின்றது. மலருக்கு மணம் இருக்கின்றது. மிருதுவான வர்ண இதழ்கள் இருக்கின்றன—தாங்கும்தண்டு இருக்கின்றது. விதையாக இருந்து, செடியாக வளர்ந்து, மலராக மலர்ந்து, விதையாகத் திரும்பவும் மாறுகின்றது. மலரின் வாழ்வும் மாறுது. ஒழுங்காகத் தொடர்ந்து நடந்துகொண்டு போகின்றது. செடி மலர்ந்து, கனிந்து, விதை — கொடுப்பதற்கு செடியின் எல்லா உறுப்புக்களும் ஒருங்கு சேர்ந்து இயங்குகின்றன. நிலவையும் மேகத்தையும் நினைவிற்குக் கொண்டு

உலகமே ஓர் உயிருள்ள ஓவியம்! உலகில் ஒழுங்கு இருக்கின்றது. அழகு இருக்கின்றது; ஒற்றுமை இருக்கின்றது. பொருட்களுக்குள் இணைப்பு இருக்கின்றது. ஓவியம் தானாக உருப்படாது. ஓவியன்வேண்டும்! சிறந்த சித்திரத்திற்குச் சிறந்த கலைஞன்வேண்டும். அப்படியென்றால் உலகம்என்ற ஓவியத்தை யார் நினைத்தான்; யார் வரைந்தான்; யார் படைத்தான்! "பகவன் முதற்றே உலகு" என்று வள்ளுவர் கூறுகின்றார். ஆம், கடவுள்தான் ஓவியன்; ஒப்பற்ற ஓவியன். "தனக்குவமை இல்லாத" (திருக்குறள்)ஓவியன்.

# பேசும் பேனா

(-4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கிறார். கல்லூரி மைதானத்தின் வாயிலண்டை செல்கிறேன். அங்குதான் ஊர்வலம் ஆரம்பமாகப் போகிறது. கழுத்த அங்கி அணிந்த பரிசாரகர்கள், அவர்களின் பின்னே சஞ்சூசையப்பர் கல்லூரி மாணவர்கள். மைதானம் பல தொகுதிகளாக இலக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியின்கீழும் குறிக்கப்பட்டகுழு வைச்சேர்ந்தோர் வந்துகூடுகின்றனர். பீட்டர்ஸ் கல்லூரியினர், பெனடிக்ற்ஸ் கல்லூரியினர், பிறிட்ஜெட் கன்னியர் கூட்டத்தினர், திருக்குடும்பக்கன்னியர் நிலையத்தினர், நல்லாயன் நிவாசத்தினர், கார்மேல் கழகத்தினர் மற்றும் பல கொழும்புப் பாடசாலைகளின் மாணவர்கள், மாணவிகள் என ஒவ்வொரு தொகுதியும் நிரம்பிவழிகிறது.

### மணி நான்கு

இறுதி ஊர்வலம் ஆரம்பமாகியது. ஈழத்தில் இறைவனின் தன்னிகரற்ற குரலொலியாய் விளங்கியவரின் இறுதி யாத்திரை அது. நான் மேற்கூறிய தொகுதிகளைச் சேர்ந்தோர் ஒருவர் பின் ஒருவராகச் செல்கின்றனர். மிக நீண்ட ஊர்வலம் அது. குருக்கள் துக்கசங்கீதம்பாடிச்செல்ல அடிகளின் பிரேதப்பேழை ஆலயத்திலிருந்து வெளியேறுகிறது. சஞ்சூசையப்பர் கல்லூரி ஆசிரியர்கள், உயர்மாணவர்கள் பேழையைத் தாங்கிவருகின்றனர்.

### பிரபலஸ்தர்கள்

வித்தியோதய சர்வகலாசாலை உபவேந்தர் பலனொறுவ விமலதர்மதீரோ, மாட்சிமைதங்கிய மகாதேசாதிபதியவர்கள், அமைச்சர் திரு. டயஸ் பண்டாரநாயகா அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உயர்திரு. டட்லி சேனநாயகா அவர்கள், பிரதமமந்திரியின் பிரதிநிதியாக டாக்டர் மாக்கி றட்வத்தை அவர்கள், மற்றும் ஈழத்தின் பிரபல தலைவர்கள் முதலியோர் ஏற்கனவே அடிகளாரின் திருவுடலைத் தரிசித்து மலர்வளையம் சமர்ப்பித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள் எனவும் அறிந்தோம்.

### மணி ஆறு

டார்லி வீதி, வாட்பிளேஸ் வழியாக மெல்லமெல்ல ஊர்வலம் சென்று கனத்தை மயானத்தை அடைய ஆறு மணிக்கு மேலாகின்றது. குருமாருடன், முன்னாள் பிரதம நீதியரசர் பசநாயக்கா, நீதியரசர் திரு. H. N. G. பெர்னாண்டோ, முன்னாள் நீதியரசர் வீரசூரியா, கொழும்புமேயர் கௌரவ V. A. சுகததாசா, சேர். அல்பேட் பீரிஸ், முன்னாள் ஆனந்தாக் கல்லூரி அதிபர் திரு. விஜயதிலகா என்போர் பிரேதப்பேழையைத் தாங்கிவருகின்றனர்.

### மயானத்தில்

மயானத்தில் ஓர் உயர்ந்த இடத்தில் ஏறிநின்று நாலுபக்கமும் பார்க்கிறேன். இழந்த ஜோதிக்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்துள்ள சனவெள்ளமே நான்குபக்கமும் தெரிகிறது. ஈழத்துக் கத்தோலிக்க திருச்சபைக்கு நேர்ந்த மாபெரும் நஷ்டம் பற்றியே ஒவ்வொருவரும் சிந்திக்கின்றனர். அஞ்சா நெஞ்சராய் உண்மையை, நீதியை எடுத்தோதிய குரல் ஓய்ந்துவிட்டது. கல்வியுலகின் சிகரமாக விளங்கிய கலாமேதை மண்ணோடு மண்ணாக மறைய அதோ கொண்டுவரப்படுகிறது

### இறுதி அஞ்சலி

ஈழத்து ஆயர்கள் சார்பில் இறுதிக் கீதம்பாடுகிறார் சேரம் ஆண்டகை. அவருடன் சோககீதம் இசைக்கின்றனர் குருக்கள் குழுவினர். அனைவரதும் இறுதி அஞ்சலியுடன் புதைக்கப் படுகிறது பீற்றர்ப்பிள்ளை அடிகளின் பூதவுடல்.

### நன்றி

இறுதியாக ஒருவார்த்தை. பீற்றர்ப்பிள்ளை அடிகளாரின் இறுதிச் சடங்குகளைத் திறம்பட நிர்வகித்தவர்களுள்பலர் கத்தோலிக்கர் அல்லாதார். பொலிஸ் காவலாளர்கள், உயர் அதிகாரிகள், மற்றும் பலகனவான்கள், சீமாட்டிகள் இவர்களுள் அடங்குவர். ஈழத்தில் கத்தோலிக்கர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கும் இத்தருணத்தில் மதபேதமின்றி, சகோதரத்துவ உணர்ச்சியுடன் மறைந்த முனிவரின் மேல் தாம்கொண்ட அபிமானத்தைக் காட்ட ஊக்கமுடன் ஒத்துழைத்த கத்தோலிக்கரல்லாதார் அனைவருக்கும் பேசும்பேனா சிரம் தாழ்த்தி நன்றிகூறி நிற்கின்றது.

## ரசத் துளிகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது சிலுவையை சுமக்கஇயலாதென நீ தயங்குவதேன்?

கல்வாரியின் பாதையில் கிறீஸ்து மும்முறை குப்புறவிழுந்தார். நீயோ முந்நூறு தடவையும், ஏன் அதற்கு மேலும்கூட விழக்கூடும். ஆயின் கிறீஸ்துவின் கருணை, உன்பக்கலிலிருந்தால் திடமுடன் மீண்டும் எழலாம்.

செலீன், உன்மேல் எனக்குப் பொறாமையுண்டாகிறது. எனதன்பர் யேசு என்னிலும் பார்க்க உன்னையே அதிகம் நேசிப்பதை எண்ணியே பொறாமைப்படுகின்றேன்.

எப்படி அறிந்தேன் என்றுதானே கேட்கிறாய். அன்பர் யேசு எவரை அதிகம் விரும்புகிறாரோ அவர்கட்கே துன்பதுரிதங்களை, சிலுவைகளை அதிகமதிகம் அளிக்கின்றார்.

துன்பதுரிதங்கள் யேசுவின் அருட்கொடைகள். அவைகள் பரலோகத்தில் எமக்குச் செல்வத்தைச் சேமித்து வைக்கும் சாதனங்கள்.

உனது அறநெறிப்பாதையில் உபயோகிப்பதற்கென இறைவன் அனுப்பும் இச்சாதனங்களை இழந்துவிட எண்ணுகிறாயா?

கண்மணி, கலங்காதே. அன்பர் யேசு உன்னையும், என்னையும் விடப் பெரியவர். எங்கள் தந்தையைவிட அதிகம் அறிவு பெற்றவர். ஒவ்வொருவருக்கும் அவர்களால் சுமக்கக்கூடிய சிலுவைகளையே அவர் தருவார்.

உனது நலன்கருதி இறைவன் அனுப்பும் துன்பதுரிதங்களைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள். உனது பிற்காலத்துக்கென அவைகள்மூலம் பரலோகத்தில் சேமித்துவைக்கப் பின்வாங்காதே.

அன்பின் முத்தங்கள்
குழந்தை யேசுவின் தெரேஸ்.

### நன்றியறிந்த தோத்திரங்கள்

கடந்த வருடம் ஐப்பசி மாதத்திலிருந்து பல செபமாலைகள் ஓதி ஒப்புக்கொடுத்து, செபமாலை அன்னையிடம் நான் விரும்பி ஆசித்துக்கேட்ட வரமொன்றை இவ்வருடம் புரட்டாதிமதி 8-ந்திகதி அவளின் பிறந்த திருநாளில் நான் அடைந்துகொண்டேன். நேர்த்திப்படி பிரசுரம்செய்கிறேன். நான் கேட்கும் மற்றும் இரு வரங்களையும் இறைவனுக்குச் சித்தமானால் அவ்வன்னை பெற்றுத்தரும்படி கோருகிறேன். செபமாலைப் பக்தியைக் கைக்கொள்ளும் நேயர்கட்கு இந்நன்றித்துதி நம்பிக்கை அளிக்கட்டும்.

செல்வி ரேஸ் பிளசம் சாமுவேல்,
பண்டத்தரிப்பு.

* * *

பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு இவர்களிடம் ஏழையாகிய யான் கேட்டுக் கொண்டபடி அவ்விஷயத்தில் அனுகூலம் பெற்றேன். நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

உமது அடியாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருளும் உலகிலே திருச்சபை

### இந்தியா ● தாயகம் திரும்பும் கர்தினல்

கார்த்திகையில் ஆரம்பமாகும் சற்பிரசாத மகாநாட்டிற்கு வேண்டியகாரியங்களைக் கவனிப்பதற்கு வந்தனைக்குரிய கர்தினல் கிருசியஸ் இவ்வாரம் தாயகம் திரும்புவார். மகாநாட்டிற்குப் பாப்புவின் வருகையைப்பற்றி நிச்சயமாக ஒன்றுமில்லை என்று உரோமையில் இவ்விந்திய கர்தினல் வெளியிட்டார்.

### ● திரைப்படத்திலே மகாநாடு

பம்பாய் சற்பிரசாத மகாநாட்டின் அழகும் கருத்தும் செறிந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் திரைப்படமாகப்பிடிக்கவும், நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளை ஒலிபரப்பவும், அர்ச். சின்னப்பர் சபையினர் பொறுப்பேற்றுள்ளனர். அகில இந்திய செய்திதரும் வானொலி மாநாட்டின் பல நிகழ்ச்சிகளை நாடெங்கும் ஒலிபரப்பும். இன்னும் அர்ச். சவேரியாரின் புனித உடல் திறப்பு சம்பந்தமாக ஒரு திரைப்படம் தயாரிக்க மத்திய அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இதற்காகச் சினிமாப்படம் எடுக்கும் சர்க்கார் அதிகாரிகள் கோவாசென்றுள்ளனர்.

### உரோமை ● அர்ச்சியசிஷ்டபட்டம்

ஐப்பசி 18-ம் திகதி வேதப்பரப்புதல் ஞாயிறன்று ஆபிரிக்க தேசத்தைச்சேர்ந்த உகண்டா மாகாணத்தின் வேதசாட்சிகள் பாப்பரசரால் அர்ச். பட்டம் சூட்டப்படுவார்கள் என்று சமாச்சாரம் எட்டியுள்ளது.

### இலங்கை ● வரவேற்கிறோம்.

சென்ற ஐப்பசி 1-ம் நாள் கொழும்பு மேற்றிராசனத்தைச் சேர்ந்த அங்கிளிக்கன் திருச்சபையிலே பேருவகை பொங்கும் மாபெரும் சுபநாள், ஆம். அன்றுதான் இலங்கையில் ஆங்கில கிறிஸ்தவ சபையினரின் சரித்திரத்தில் முதன்முறையாக ஓர் இலங்கையர்—ஹறல்ட் டி சொய்சா அவர்கள் கொழும்பு, அங்கிளிக்கன் மேற்றிராணியாராக நியமனம் பெற்றார். வத்திக்கான் பொதுச்சங்கத்தின் முதலாம் இரண்டாம்கட்டத்திற்கு இவர் அகிலஉலகின் அங்கிளிக்கன் திருச்சபையின் மேற்பார்வையாளராகச் சென்றிருந்தார். இன்னும் சில ஆண்டுகளுக்குமுன் சம்பத்திரிசியார் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் இவர் கலந்துகொண்டது வாசகர்களுக்கு ஞாபகத்திலிருக்கலாம். இலங்கைப் புரொட்டஸ்தாந்து திருச்சபையின் ஒற்றுமைக்காக இவர் ஆற்றிவரும் சேவை அளப்பரிது. தேவன் இவரை ஆசீர்வதிப்பாராக.

### வத்திக்கான் ● யூதர்கள்—கடவுளைக் கொன்ற கயவர் கூட்டமா?

"சகல யூதர்களும் கிறிஸ்துவின் கொலைக்குப் பொறுப்பாளிகளல்ல. ஆனால், கிறிஸ்தவர்கள் பல்லாண்டுகளாகக் கடவுளைக் கொன்றபழியே யூதசாதியின்மேல் சுமத்தினர். இதன்பயனாக இவர்கள் என்றும் வெறுத்து ஒதுக்கப்பட்டனர். ஆனால், அப்போஸ்தலர்கள் அப்படி நினைக்கவில்லை. சரித்திரபாங்கிலே ஒருசில யூத வம்சத்தினரே யேசுவுக்கு எதிராக எழும்பி அவரைத் தொலைக்கக் கங்கணங்கட்டினர். ஆனபடியால், கடவுளைக்கொன்ற கயவர்களென்ற பழியை எல்லா யூதர்கள்மேலும் சுமத்துவது சரியல்ல. உண்மையில் யூதர்கள் எமது விசுவாசத்தின் முன்னோடிகள் என்பதைத் திருச்சபை நம்புகிறது"— என்று கர்தினல் பெயா ஆண்டகை அவர்கள் கூறினார்.

---

## மிஷன் ஞாயிறு....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### வேதம்பரப்புவது குருமார் மாத்திரமா?

தேவனது போதனைகளைப் பரப்புவதில் பாப்பரசர், மேற்றிராணிமார், குருமாருக்கு விசேஷவேலைகள் உண்டு. ஆனால், சகலகத்தோலிக்கரும் வேதத்தைப்பரப்பத் தம்மாலானவற்றைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர். பிறர்சிநேகம் தேவனின்போதனைகளின் அடிப்படையாகும். அப்படியாயின் தாம்பெற்ற அரும்திரவியத்தைப் பிறருக்கும் அறிவிப்பது சகலரதும் கடமையல்லவா? திருச்சபை வளரவேண்டுமானால் அதன் அங்கத்தவர் யாவரும் அதன் வளர்ச்சிக்குத் தம் ஆற்றலுக்குத் தக்கபடி உதவவேண்டும். ஒவ்வொரு குருவானவரும் தமக்குரிய வேலையைச் செய்வதற்கு அவருக்குப் பின் இருந்து உதவிதரப் பலர் தேவைப்படுகின்றனர். பல்வகையான உதவிகளைக் கத்தோலிக்க நன்மக்கள் செய்ய வேண்டும். தமது நல்லொழுக்கத்தினால், நல்முயற்சிகளினால், செபதபங்களினால், தானதருமங்களினால் இவ்வுதவிகளை அளிக்கக்கேட்கப்படுகின்றனர்.

### பாப்பரசரது விசேஷசபை

வேதப்பரப்புதற்சபையின் வேலைமிக முக்கியமாக இருப்பதால் இச்சபை பாப்பரசரது விசேஷ பரிபாலனத்தின் கீழ் விளங்கிவருகின்றது. "இச்சபை எமதுபெயரிலே உலகம்முழுவதிலும் பலவகைப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டிருக்கின்றது" என்று 6-வது சின்னப்ப பாப்பரசர் கூறி, இதற்கு ஆதரவளிக்கச் சகலகத்தோலிக்க மக்களுக்கும் விண்ணப்பித்திருக்கின்றார். இச்சபையின் காரியதரிசியாகிய கர்தினல் சிகிஸ் மொண்டி அவர்கள் ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் இச்சபையின் கிளைஸ்தாபனம் நிறுவுதற்கு யோசனைகூறி இருக்கின்றார்.

---

மிகுபூசித
## சுவாமி பீற்றர்ப்பிள்ளை, O. M. I.,
அவர்களின்
# பிரிவிரங்கல்

(பண்டிதர் ஆசிநாதன், அதிபர் : மகாவித்தியாலயம், நெடுந்தீவு)

1. ஐயகோ! அந்தோ! அம்மா! அதிர்ச்சியே யாகுஞ் செய்தி
துய்யமெய்க் குருவாம் பீற்றர்ப் பிள்ளைதான் மறைந்து விட்டார்

2. திருமறைச் சோதியின்று அணைந்ததே அவனிஎங்க
ஒருகலைக் கோயிலின்று இடிந்ததே ஈழத் தாயின்

3. உயர்மதத் தலைவனை உத்தமக் குருவும் மாண்டார்
அயர்வுகள் கொள்ளலாகும் கலைமலை சரிந்த தன்றே

4. அறிஞருள் தலைமைகொண்டு அரும்புகழ் பெற்றமேதை
பெருமக்கள் போற்றத்தக்க பெருமிதப் பட்டம் பெற்றோன்

5. சகலசா மத்தியசிலன் தகைமைக ளுற்ற மோனி
பகருதற் கரிதேயான பதவிகள் பெற்ற ஞானி

6. உலகினில் உசிதமான உயர்வுகள் உற்றதமிழன்
பலகலை பத்துப்பாஷைப் பண்புகள் பயின்ற குரவன்

7. பல்கலைக் கழகந்தந்து பாங்குற நடத்தி வந்தோன்
சொல்வலான் சமூகசேவைச் செம்மலான் கொள்கையாளன்

8. தத்துவ ஞானியென்போம் திருமறைத் தீபம் என்போம்
உத்தமக் குரவர் என்போம் உலகுக்கோர் ஒளியே என்போம்

9. தமிழாசான் மைந்தனென்போம் தக்கோரின் மிக்கோனென்போம்
சுமையெல்லாந் தாங்கிக்கொண்டு சொர்க்கத்தை யடையலானார்

10. ஆண்டவன் அருகிருந்து அடிகவர்க் குதவிசெய்ய
மாண்டநற் குரவரான்மா சாந்தியே யுறுக! ஆமென்!


எல்லோரும் விரும்பிச்செல்லும் விருந்தினர் மாளிகை

# "பாம் கோட்"

பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

இங்கே உள்ள வசதிகளிற் சில:

● தாராளமான பெரிய அறைகள்
● மின்விசிறிகள் ● றேடியோ சங்கீத உபகரணங்கள்
● சுகதளபாடங்கள்
அறை ஒவ்வொன்றுடனும்
● ஸ்நான சுத்திகரத் தனிஅமைப்புகள்
● உணவுஅருந்த உல்காசமான திறந்த வெளிஇடம்
● மாடி நந்தவனம் ● பூந்தோட்டமுற்றம்
சிறு பிள்ளைகளுக்கு உகந்த
● விளையாட்டு அறைகள் ● சிறு மிருகசாலை
● மோட்டார்வாகனங்கட்கு 'கருஜ்' வசதி
உல்லாசப் பிரயாணிகளுக்கு உதவியான
● வழிகாட்டிகள் ● போக்குவரவு வசதிகள்
மேல்நாட்டு, கீழ்நாட்டு முறைகளில் தயாரிக்கப்படும்
● திறமையான உணவு

| | தனிஆன் | இருவர் | |
|---|---|---|---|
| 1-ம் வகுப்பு அறை | 10 ரூபா | 18 ரூபா | நாள் ஒன்றுக்கு |
| 2-ம் வகுப்பு அறை | 7 ரூபா 50 சதம் | 15 ரூபா | |

கிரமமாய் வருபவர்களுக்கும், வர்த்தக பிரயாணிகளுக்கும் விசேஷ சலுகைகள் காட்டப்படும்.

விவாகவரவேற்பு, பிரியாவிடை முதலிய வைபவங்களுக்கு உகந்த இடம் இது.

"பாம் கோட்" மண்டபம், வெளிமுற்றம் கொண்டாட்டங்களுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மறவாதீர்கள்:

விடுதி வசதிகளுக்கும், கொண்டாட்டங்களுக்கும் யாழ்ப்பாணத்தில் கீர்த்திவாய்ந்த இடம்

# "பாம் கோட்"


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 10-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org